**தலைப்பு 102 – நிதி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நிதி அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்காக திட்டமிட்டபடி கோரப்பட வேண்டிய மொத்த கட்டுநிதி ரூபா 7,156.83 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அத் தொகையில் ரூபா 2,304.04 மில்லியன் தொகை மாத்திரம் கோரப்பட்டிருந்தமையால் கோரப்பட்ட கட்டுநிதி பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட கட்டுநிதியை விட ரூபா 4,852.79 மில்லியன் கூட்டுமொத்தம் அல்லது 68 சதவீதம் குறைவாக காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக செலவின தேவைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரமே கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. |
| (ஆ) | பட்டியலிட்டவாறு உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 2,304.04 மில்லியன் கூட்டுமொத்த தொகை கட்டுநிதியாக கோரப்பட்டிருந்த போதிலும் திறைசேரியால் ரூபா 1,391.26 மில்லியன் கூட்டுமொத்த தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததன் விளைவாக பெறப்பட்ட கட்டுநிதியானது கோரப்பட்ட கட்டுநிதியை விட ரூபா 912.78 மில்லியன் கூட்டுமொத்தம் குறைவாக காணப்பட்டது. | வழங்கப்பட்ட கட்டுநிதியின் அடிப்படையில் மாத்திரமே செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது திறைசேரி அச்சீட்டுத்தாள்களில் (எஸ்ஏ 92) குறிப்பிடப்பட்ட ரூபா 940.69 மில்லியன் கூட்டுமொத்தமான செலவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். |

**2.3 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 10 செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,050,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீடுகள் யதார்த்தமானதாகவும் வினைத்திறனாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மூலதன செலவினங்களை மேற்கொள்வதற்காக 04 அரச நிறுவனங்களிற்கு ரூபா 87,850,000 கூட்டுமொத்தமான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியளவில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 61,293,207 கூட்டுமொத்தம் அல்லது 70 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.4 முற்பணக் கொடுப்பனவும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 அளவில் நிலுவையாக இருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள மொத்தக் கடன்கள் ரூபா 920,110 ஆக காணப்பட்டது. | அறவீடு செய்யப்பட முடியாத கடன்கள் நி.பி. 113 இன் பிரகாரம் விட்டுவிடுவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அரச நிதித் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர் ஒருவரின் கடன் கோவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடன்களை அறவீடு செய்வதற்காக மிகுதியாகவுள்ள கடன் தொகைகள் சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. | கடன் நிலுவைகள் தொடர்பான விடயங்களை புலனாய்வு செய்து அது தொடர்பாக தாமதமின்றி மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 04 ஆண்டுகளிற்கு மேலாக காணப்படுகின்றதும் பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவிலுள்ள 54 உத்தியோகத்தர்களிமிருந்து அறவிடப்பட வேண்டியதுமான மொத்த நிலுவைக் கடன் மீதிகள் ரூபா 3,334,459 ஆக காணப்பட்டது. | இக் கடன் மீதிகள் பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவில் பேணப்படுகின்ற முற்பணக் கணக்கிற்கு பொருந்துவதுடன் எதிர்காலத்தில் இக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டிய நபர்கள் பணிபுரியும் இடங்களை இனங்கண்டு கடன்களை அறவீடு செய்வதற்கு அல்லது நி.பி. 113(3) இன் பிரகாரம் அறவிடப்பட முடியாத கடன் நிலுவைகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

ஹில்ரன் ஹோட்டல் மற்றும் கிராண்ட் ஹயாட் கொழும்பு இன் பங்குரிமைகளை விற்பனை செய்வதற்கு 2018 யூலை 17 இல் அங்கீகரிக்கப்பட்ட கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட பெறுகை தொடர்பான ஆலோசனைக் குழுவானது மதியுரையாளர்களாக பஹ்ரைன் மற்றும் இலங்கையின் எம்ரீஜ கென்சல்ரிங்கின் துணைக்கம்பனியொன்றான சிங்கப்பூரின் லசாட் ஏசியாவை தெரிவு செய்வதை பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ---------------------------------------- | ------------------ |
| (அ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் மேற்குறிப்பிட்ட ஆலோசனை நிறுவனத்துடன் 2018 செப்தெம்பர் 27 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நான்கு மைல்கற்களின் கீழ் உரிய தொழிற்பாடுகளை இறுதிப்படுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் அவ் வேலை பூர்த்தி செய்தல் காலப்பகுதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | லசாட் ஏசியா மற்றும் எம்ரீஜ கென்சல்ரிங் இரண்டு மைல்கற்களை 2019 மே 07 இல் இறுதிப்படுத்தி முறையே ரூபா 13,032,986 (ஐ.அ.டொலர் 68523) மற்றும் ரூபா 4,628,607 தொகையான விலைப்பட்டியல்களை நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் 19 மாதங்களுக்குப் பின்னர் ரூபா 17,500,000 தொகையான குறைநிரப்பு ஏற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் உரிய ஆலோசனை நிறுவனங்களிற்கு மேற்குறிப்பிட்ட ரூபா 17,661,593 மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதியேற்பாடுகளை சரியாக ஒதுக்கீடு செய்த பின்னர் செயற்திட்டங்களை தொடங்குவதற்கும் கொடுப்பனவுகளை முறையாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்தல். |
| (இ) | எனினும் மேற்படி பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டு, மேற்குறிப்பிட்டவாறு பணம் செலவிடப்பட்ட போதிலும் கிராண்ட் ஹயாட் ஹோட்டல் மற்றும் ஹில்ரன் ஹோட்டலை அபிவிருத்தி செய்வதற்காக செலந்திவ இன்வெஸ்ற்மென்ட் லிமிட்டட் உருவாக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டுள்ளது. | அரசாங்க கொள்கைகளிற்கு இணங்க அரச வளங்களிலிருந்து அரசாங்கத்திற்கு ஆகக்கூடிய நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

இனங்காணப்பட்ட அவதானிப்பு பின்வருமாறுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளூர் நிதிகள்/ வெளிநாட்டுக் கடன்களைப் பயன்படுத்தி அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 02 செயற்திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 580,100,000 கூட்டுமொத்தமான தேறிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களின் செயலாற்றல் மெதுவாக காணப்பட்டதால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 472,754,269 கூட்டுமொத்தமான நிதியேற்பாடு அல்லது 81 சதவீதம் சேமிக்கப்பட்டுள்ளது. | சட்ட மற்றும் நடைமுறை காரணங்களால் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம், பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம், செயற்பாட்டு நடவடிக்கைகளில் தாமதம் மற்றும் செயற்திட்டங்கள் தொடங்கப்படாமை போன்ற காரணங்களால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதியேற்பாடுகளும் வளங்களும் வினைத்திறனாக பயன்படுத்தப்படுதல். |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதி அமைச்சிற்கு சொந்தமான 115 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான வாகன மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி அறிக்கை சாத்தியமானளவு விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த வாகன மெய்மையாய்வை மேற்கொண்டு மெய்மையாய்வு தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்தல். |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான முப்பது (30) வாகனங்கள் முறையாக மாற்றப்படாமல் அவை ஏனைய நிறுவனங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | உரிய வாகனங்களை முறையாக மாற்றுவதற்கு அல்லது அவற்றை மீளவும் அமைச்சிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பத்து (10) வாகனங்கள் முறையாக மாற்றப்படாமல் ஏனைய நிறுவனங்களிலிருந்து அவை அமைச்சிற்கு பெறப்பட்டிருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | உரிய வாகனங்களை முறையாக மாற்றுவதற்கு அல்லது அந் நிறுவனங்களிற்கு அவற்றை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் கூட்ட மண்டபத்தில் ஒரே நேரத்தில் ஒரு குழு மாத்திரமே கூட முடிந்திருந்ததமையும் வரி மேன்முறையீட்டுச் சட்டத்தின் கீழ் மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந் நோக்கத்திற்குத் தேவையான கட்டிட வசதிகள் வழங்கப்படாமையினால் வரி மேன்முறையீட்டுத் தீர்வுச் செயன்முறையை வினைத்திறனாக மேற்கொள்ள முடியாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | புதிய திட்டத்தின் பிரகாரம் 02 கூட்ட மண்டபங்களை ஸ்தாபிப்பதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஒரே நாளில் 3 குழுக்கள் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | குழுக் கூட்டங்களிற்கு ஏற்கனவே உள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 34 கூட்டுமொத்தமான அல்லது 10 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களில் 11 சிரேஷ்ட மட்டத்திலுள்ள வெற்றிடங்களாகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடும் போது இது ஏறத்தாழ 33 சதவீதமாக காணப்பட்டது. | ஏற்கனவேயுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு உத்தியோகத்தர்களை இடம்மாற்றம் செய்வதற்கு பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் வரை பதிற்கடமை அடிப்படையில்/ பதவியின் கடமைகளில் கலந்துகொள்ளும் வகையில் | அவ் வெற்றிடங்கள் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தால் அவற்றை நிரப்புவதற்கு அல்லது அத்தகைய பாதிப்பொன்று இல்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களிற்கு கடமைகள் ஒதுக்கப்பட்டிருந்ததால் அமைச்சின் செயலாற்றலிற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | |
| (ஆ) | நிதி அமைச்சு சம்பளப்பட்டியல் அடிப்படையில் ஏனைய நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் 07 உத்தியோகத்தர்களை விடுவித்திருந்தது. | நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். | நிறுவனத்தின் வழமைக்கு மாறான செயற்பாடுகளிற்கு வளங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |